# களபூமி கலையகம்
# KALAPOOMY KALAIYAGAM
களபூமி, காரைநகர். Est:27 July 2013

"கல்வியுடன் கலை வளர்த்து வாழ்வில் வளம் பெறுவீர்"

பதிவு இல.: வட.மா.க.அ.பண்/யாழ்./காரை 2014/01 அரச பதிவு இல.: CD/04/09/01/02/JAF/025


24/07/2017

களபூமியில் கானமழை

விமர்சனம் இங்கே, படங்கள் வரும் பின்னே

23-07-2017 ஆடி மாதம், அமாவாசை கரிய நாள், அத்துடன் நமக்கு ஒரு முக்கியமான நாளுமாகும்.

இருந்தும் அமரத்துவம் அடைந்த தந்தையர்களை மனதில் கொண்டு தீர்த்தக் கரையில் நீராடி முன்னோர்களுக்குப் பிதிர் வழங்கி, விரதம் முடித்து, சிறிது கண்ணயர்ந்து பிற்பகல் 3.30 மணியளவில் ஆரம்பமாகிய எமது கலையக நிகழ்ச்சிகளைப் பார்த்து ரசிக்க மக்கள் கூடினார்கள். காரைநகரைப் பொறுத்தவரையில் வருணபகவான் வருவான் தனது கரிய துயிலான மேகங்களைக் காண்பிப்பான். அத்துடன் வாயு பகவானையும் அழைத்து வந்து அத்துயிலாடையினை வடக்கு கிழக்கு திசைகளுக்குத் தூக்கிச்செல்ல அனுமதிப்பான். விளைவு - காரைநகர் மக்களை வானம் பார்த்த ஏமாளிகளாய் விட்டுச்செல்வான். அந்தணர்கள் யாகம் செய்தார்கள், வேள்வி நடாத்தினார்கள். ஆனாலோ வருணனுக்குக் கருணை பிறக்கவில்லை.

இருந்தும் பூமி குளிராவிட்டாலும் தமது உள்ளங்கள் குளிரட்டுமென்று கலைவாணியின் கடைக்கண் பார்வையை நாடினார்கள் களபூமி மக்கள். களபூமி கலையகத்தின் நான்காவது நிறைவு விழாவினை தீர்மானித்தபடி இம்முக்கியமான நாளில் கொண்டாடி மகிழ்ந்தார்கள். ஆங்கிலத்தில் ஒரு பழமொழியுண்டு. அதாவது ' Good wine needs no Bush' என்பதாகும். அதற்கிணங்க விளம்பரம், படாடோபம் எதுவும் இல்லாமல் இளஞ்சமுதாயத்தினை முன்னிலைப்படுத்தி அவர்கள் மூலமாக அவர்களால் நிகழ்ச்சிகள் நடத்த ஒழுங்கு செய்யப்பட்டது. இப்படியொரு நிகழ்ச்சியைத் தம்மாலும் திறம்பட நடத்த முடியும் என்று நிருபித்து அசத்திவிட்டனர் நம் வருங்காலத்தினர். அவர்களின் துணிவு மிக்க முயற்சி மிகவும் பாராட்டிற்குரியது.

இந்நிகழ்ச்சியில் பங்கு பற்றிய சிறார்களுடன் கலையகத்தின் நடன ஆசிரியை செல்வி சிவரஞ்சனா தனது பங்கிற்கு, பிரதம விருந்தினர் கலாநிதி(திருமதி) வீரமங்கை யோகரத்தினம் கூறியது போன்று ஆனந்தகுமாரசாமி வடித்த 'Dance of Siva' எனும் நூலின் சாராம்சத்தினைக் கண்முன்னே கொண்டு வந்து நிறுத்தினார். அத்துடன் கலையகத்தின் சங்கீத ஆசிரியை ரஞ்சனி பைரவன் தனது கான மழையினால் வந்திருந்தோரின் மனங்களைக் குளிர வைத்தார். அவர் பாடிய பாட்டுக்களால் அழகன் முருகனை அழைத்தார், ஆடி மாதத்தில் மார்கழித் திங்களை நினைவூட்டினார். நிகழ்ச்சியில் பங்களித்த மாணவர்களுடன் எமது கலையகத்திற்கு அமைக்கப்படவிருக்கும் கட்டிடத்திற்குரிய நிலம் கௌ்வனவு செய்வதற்கான நிதியில் பெரும்(முக்கிய) பங்கினை வழங்கிய அமரர் K K V குலரத்தினத்தின் மகனான திரு சர்வானந்தலிங்கம் அவர்களின் மகள்களான செல்வி மேனகாவும் செல்வி கனகாவும் இங்கிலாந்திலிருந்து வருகை தந்து நடனம், வயலின் நிகழ்சிசிகளை வழங்கி வந்திருந்தோரை மகிழ்வித்தனர்.

'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவதெங்கும் காணோம் என்று பாரதி பாடினான். அவன் தமிழ் மொழியுடன் ஆங்கிலம், வடமொழி, அயல் மொழிகளான மலையாளம்,

| | | |
|---|---|---|
| மு.பரம்தில்லைராசா | ஆ.அபிராமி | சிவா.தி.மகேசன் |
| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |